# திருநீற்றுப் புதனுக்குப் பின் வரும் வெள்ளி

**முதல் வாசகம்:**

உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளாதிருப்பது அன்றோ நாம் விரும்பும் நோன்பு!

**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 58 : 1 – 9**

இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார்: "பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்திவிடாதே. எக்காளம் முழங்குவது போல் உன் குரலை உயர்த்து. என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக் கூறு. அவர்கள், நேர்மை யானவற்றைச் செய்யும் மக்களினம் போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள். என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள். நேர்மையான நீதித்தீர்ப்புகளை என்னிடம் வேண்டுகின்றார்கள். கடவுளை அணுகிவர விழைகின்றார்கள்.

"நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்?" என்கின்றார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள். உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள். இதோ, வழக்காடவும், வீண் சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணா நோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப்போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்?

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு! பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது

அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும். விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும். உன் நேர்மை உனக்கு முன் செல்லும். ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின் சென்று காக்கும். அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய். அவர் உனக்குப் பதிலளிப்பார். நீ கூக்குரல் இடுவாய். அவர் “இதோ! நான்” என மறுமொழி தருவார்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 51 : 1 – 2, 3 – 4, 16 – 17 (பல்லவி: 17b)**
**பல்லவி: நொறுங்கிய உள்ளத்தை இறைவா, நீர் அவமதிப்பதில்லை.**

1. கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும். என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். பல்லவி
2. ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் மனக்கண் முன் நிற்கின்றது. உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன். உம் பார்வையில் தீயது செய்தேன். பல்லவி
3. ஏனெனில், பலியினால் உம்மை மகிழ்விக்க முடியாது. நான் எரிபலி செலுத்தினாலும் நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே! நொறுங்கிய, குற்றம் உணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை. பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்: ஆமோஸ் 5:14**
நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள்.
அப்பொழுது படைகளின் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடு இருப்பார்.

**நற்செய்தி வாசகம்:**

மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 9 : 14 – 15**

அக்காலத்தில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்."

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

நோன்பு இருப்பது என்பது இன்றைக்கு ஒரு கலாச்சாரமாக மாறி வருகின்றது. மருத்துவர்கள் சொல்லி பலவற்றை தவிர்ப்பது உண்டு. தன்னை அழகுபடுத்திக் கொள்ள, ஜவுளிக்கடை கண்காட்சி பொம்மையைப் போல தங்களை மாற்றிக் கொள்ள இன்று பல பேர் நோன்பிருப்பது உண்டு. போராட்டங்கள், சலுகை, சம்பள உயர்வு என பல காரணங்களுக்காக உண்ணநோன்பிருப்பது உண்டு. இதிலே மதரீதியாக கூட இன்றைக்கு காவியுடை உடுத்தி, விரதமிருந்து, நடை நடைந்து திருத்தலங்களுக்கு செல்லுவது என்பது நடைமுறையாகி வரும் போது, விரும்பியதை பெற்றுக் கொள்ள நேர்ச்சை என்ற பெயரில் கூட நோன்பிருந்து வருவது வழக்கமாகி உள்ள காலத்தில் இந்த நோன்பின் காலம் அர்த்தம் இழந்து போகின்றதோ என கேட்க தோன்றுகின்றது. பாடுகளின் காலத்தில் நோன்பிருப்பது என்பது நம்முடைய பாவங்களை எண்ணி நம்மை அடக்கியாளவும், பாவத்திற்கு பரிகாரம் செய்து கொள்வதற்கும், இதனால் வரும் பொருளாதாரத்தை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்வதற்கும் என்பதை உறுதி செய்து கொள்வது நல்லது.

**********